## கட்டமைப்பு



கூட்டு ஒருங்கிணைப்புக் குழு (ஜே.சி.சி)

MoAன் தலைமை செயலாளர்

**திட்டக்குழு 1**

**DoA (C/P), MOA**
- திட்ட இயக்குனர்
- திட்ட மேலாளர்
- திட்ட ஒருங்கிணைப்பாளர்
- பிற சகாக்கள்

மாகாண DoA, HORDI, FCRDI முதலியனர்

JICA நிபுணர் குழு (ஜப்பானிய நிபுணர்கள்)

**ERD**

பங்குதாரர் (பொது, தனியார் மற்றும் அகடமி உறுப்பினர்கள்)

**JICA**
- JICA இலங்கை அலுவலகம்
- JICA இலக்குகளின் உறுப்பினர்

*ஒத்துழைப்பு நடவடிக்கைகள்*

நிப்போன் கொய்(NK)
- JICA SUAPF திட்டம்
- NK கொழும்பு அலுவலகம்

தொடர்புடைய நிறுவனங்கள்
- ஜப்பான் தூதரகம்
- பிற ஜப்பானியர்கள்
- ஒத்துழைக்கும் பங்காளிகள்

## கால எல்லை

ஜூன் 2021 — செப்டம்பர் 2022 — மார்ச் 2022 — டிசம்பர் 2025


திட்டமிடல் கட்டம்

செயல்படுத்தல் கட்டம்




Sensitization workshop in Nuwara Eliya District, Central Province

## திட்டத்தளங்கள்




## திட்ட அலுவலகம்




SHEP & SSC திட்ட அலுவலகம்
தாவர மரபணு வள மையம்,
அஞ்சல் பெட்டி 59,
கன்னொருவ, பேராதனை.
தொலைபேசி : +94(0) 77-740-3010
மின்னஞ்சல் : Riyas Mohamed riyas403010@gmail.com



*ஷெப் & எஸ். எஸ். சி. யால் நவம்பர் 2023இல் வெளியிடப்பட்டது.*


# JICA தொழில்நுட்ப கூட்டுத்தாபனம்

# SHEP&SSC

சிறு மற்றும் நடுத்தர அளவிலான வேளாண்மை உற்பத்தியாளர்களின் விநியோகச் சங்கிலி கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் திட்டம்



*இலக்குக்கு உட்பட்ட பகுதியில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளின் வாழ்வாதாரங்களை விநியோகச சங்கிலி கட்டமைப்பை பரவலாக வலுப்படுத்துவதன் மூலம் மேம்படுத்தல்*
*(திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்கிலிருந்து).*

**ஜப்பான் இன்டர்நெஷனல் கோபரேஷன் ஏஜன்சியின்**
***ஆதரவுடன்***
## வேளாண்மைத்துறை

# பின்னணி

தேசிய வேளாண்மைக் கொள்கைக்கு (NAP) 2020-2030 அமைய உற்பத்தித்திறன் மேம்பாடு, விவசாயத்தின் சர்வதேச போட்டித்திறன் அதிகரிப்பு மற்றும் காலநிலை மாற்றத்திற்கேற்ப விரிதிறனான வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் என்பவற்றை வலியுறுத்துகிறது.





இலங்கையில் விவசாய விநியோகச்சங்கிலி பலதரப்பட்ட தடைகளை எதிர்கொள்கிறது. உதாரணமாக வரையறுக்கப்பட்ட விநியோக வழிகள், பல நிலை இடைத்தரகர்கள் மூலம் அதிக விநியோக செலவுகள், அறுவடைக்கு பிந்தைய அதிக இழப்புகள் போன்றவை. எனினும் அரசிற்கு இந்நிலமையை மேம்படுத்த எந்த பயனுள்ள விரிவாக்க அணுகுமுறையும் இல்லை. விரிவாக்க அமைப்பினை வலுப்படுத்துவதன் ஊடாக பயனுள்ள தொழில்நுட்பம் மற்றும் சந்தை சார் தகவல்களை மேம்படுத்துதலே சவாலாக உள்ளது.

# திட்டம்



இந்த திட்டத்தின் மையமாக சிறுதானிய தோட்டக்கலையிற்கு அதிகாரமளித்தல் மற்றும் ஊக்குவிப்பு அணுகுமுறையை (SHEP) பயன்படுத்தி தோட்டக்கலை பயிர்களின் விநியோகச்சங்கிலிகளை வலுப்படுத்துவதன் மூலம் இலக்கிற்குறப்பட்ட சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது ஆகும்.

# சந்தை சார்ந்த விவசாய விரிவாக்கம் - ஷெப் (SHEP)

சிறுதொழில் தோட்டக்கலை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவிப்பளித்தல் (SHEP) என்பது ஒரு விவசாய விரிவாக்கம் பற்றிய கென்யாவில் JICA உருவாக்கிய அணுகுமுறையாகும். SHEPஇனை பயண்படுத்துவதன் மூலம் விவசாயிகள் வழமையாக பயண்படுத்தும் “வளர்த்தோம் விற்றோம்” என்ற முன்மொழிதலுக்கு பதிலாக “விற்பனைக்காகவே வளர்ப்போம்” என்ற கொள்கையோடு நுகர்வுச்சந்தையின் தேவைக்கு ஏற்ப தங்களது வருமானத்தை அதிகரித்துக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறார்கள்

### ஷெப்பின் நடவடிக்கைகளை செயல் படுத்துவதற்கான அத்தியாவசிய நான்கு படிகள்

| 4 படிகள் | செயல்பாடுகள் |
|---|---|
| 1.விவசாயிளுடன் இலக்கைப் பகிர்ந்து கொள்ளுதல். | உணர்திறன் பட்டறை (சிந்தனை நிலை) |
| 2. விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல். | பங்கேற்பு அடிப்படை கணக்கெடுப்பு<br>பங்குதாரர் மன்றம் (விரும்பினால்)<br>சந்தை ஆய்வு |
| 3. விவசாயிகளே முடிவுகளை எடுத்தல். | (திருப்பு முனை)<br>பயிர் தெரிவினை இலக்கு செய்தல்<br>பயிர் காலண்டர் தயாரித்தல் (செயல் நிலை) |
| 4. விவசாயிகள் திறன்களைப் பெறுதல். | தளத்தில் பயிற்சிகள் |
| பின்தொடர்தல் மற்றும் கண்காணிப்பு (பங்கேற்பு எண்ட்லைன் கணக்கெடுப்பு உட்பட) | |

*Source : Introduction of SHEP program, Dr. Jiro Aikava*

# விநியோகச் சங்கிலியை வழுப்படுத்தல

திட்டமிடல் கட்டத்தினை பொது - தனியார் - அகடமி மூலம் செயல்படுத்தி அதனை 9 விநியோகச் சங்கிலி செயல்திட்டங்களாக வகுக்கப்பட்டு பங்குதாரர்களுடன் சேர்ந்து செயல்படுத்தப்படும்.




# நோக்கம்

திட்டத்தினூடாக இலக்கு செய்யப்பட்ட சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளின் வாழ்வாதாரத்தை விநியோகச்சங்கிலி தொடர்புடைய கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் மேம்படுத்துவதாகும்.

# வெளியீடுகள்

1. சந்தை சார்ந்த வேளாண்மை விரிவாக்கத்தை (SHEP) பயன்படுத்தி விநியோகச்சங்கிலியை வலுப்படுத்துவதற்கான ஒரு செயல்திட்டத்தை பங்குதாரர்களால் வகுக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.
2. இலக்கிற்கு உட்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளது திறன், சந்தை சார்ந்த விவசாயத்தில் வளர்ச்சியடைந்துள்ளது.
3. இலக்கிற்கு உட்பட்ட பகுதிகளின் தோட்டக்கலை பயிர்களின் விநியோகச்சங்கிலி பலப்படுத்தப்பட்டுள்ளது.
4. திட்டத்தின் மூலம் பெற்ற அனுபவமும் அறிவும் நாட்டில் பரவலாக பகிரப்படுகிறது.

# செயல்பாடுகள்

## வெளியீடு 1 செயல் திட்டமிடலுக்கு

- சந்தை சார்ந்த விவசாய விரிவாக்கத்திற்கான செயல் திட்டத்தினை முறைப்படுத்துதல்.
- தோட்டக்கலை பயிர்களின் விநியோகச்சங்கிலி செயல் திட்டத்தினை முறைப்படுத்துதல்.

## வெளியீடு 2 SHEP க்கு

- தொகுதி ஊழியர்களுக்கு SHEP முறைகளை கற்றுக் கொடுத்தல்.
- இலக்கு படுத்தப்பட்ட குழுகளுக்கு சந்தை சார்ந்த விவசாய விரிவாக்க நடவடிக்கைகளை செயல்படுத்த தொகுதி ஊழியர்களுக்கு உதவுதல்.
- இலங்கைக்கு ஏற்ப சந்தை சார்ந்த விவசாய விரிவாக்க கையேடு ஒன்றை தயாரித்தல்.

## வெளியீடு 3 விநியோக சங்கிலிக்கு

- விநியோக சங்கிலி வலுப்படுத்தல் நடவடிக்கைகளை செயல்படுத்தல்.
- விநியோக சங்கிலி பங்குதாரர்களுக்கு மத்தியில் பொருத்தம் மற்றும் தகவல் பரிமாற்றத்தை வழிவகுத்தல்.
- விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்குதல்.

## வெளியீடு 4 திட்ட நிலைத்தன்மைக்கு

- அரசு மற்றும் பிற பங்குதாரர்களுக்கு மத்தியில் திட்டத்தின் வெளியீடுகளை பரப்புதல்.
- கொள்கையின் வெளியீடுகளில் பிரதிபலிப்பை ஊக்குவித்தல் மற்றும் நிலையான நடவடிக்கைகளுக்கான பட்ஜெட் உருவாக்கம்.